உ

கடவுள் துணை.

கேதாரி ஈஸ்வரர்

நோன்புகதை.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.
கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

1914

உ

கடவுள் துணை.

கேதாரீஸ்வரர் நோன்புகதை.

காப்பு

காரணையகூந்தற் கவுரியியற்றியகே
தாரவிரதகதை யான்படிக்கச் - சீரிவரும்
ஐந்துகரத்தந்திமுகத் தண்ணலடியார்க்கருளுங்
கந்தமலராச்செஞ்சரணே காப்பு

ஆதிகாலத்திலே ஸ்ரீ கயிலாயத்தில் நவரத்தினங்களினாலிழைத்த ஓர் சிம்மாதனத்தின்மீதில் பரமேஸ்வரரும் பார்வதாதேவியும் கொலுவாகவீற்றிருக்கையில் பிர்மா-விஷ்ணு-தேவேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் அஷ்டவசுக்கள் கின்னரர் கிம்புருடர் கெருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் ஜெனகர் ஜெனகனந்தனர் ஜெனக்குமாரர் தும்புருநாரதர் மற்றுமுண்டான தேவரிஷிகளும் இன்னம் பிதாமானதேவர்க்களும் பிரதிதினம்வந்துபரமசிவத்தையும் பார்வதா தேவியையும் பிரதட்சண நமஸ்காரஞ்செய்துகொண்டுபோவார்கள் இப்படியிருக்க ஒருநாள் சமஸ்தமானதேவர்களும் ரிஷிகளும்வந்து ஈஸ்வரரையும் ஈஸ்வரியையும் பிரதட்சண நமஸ்காரஞ்செய்து தோத்திரஞ்செய்து சிலவுபெற்றுக்கொண்டு தங்கள்தங்கள் எதாஸ்தானங்களுக்குப் போகிறசமயத்தில் பிறிங்கியென்கிற

ரிஷி ஒருவர்மாத்திரம் பார்வதியம்மனை புறம்பாகத்தள்ளிவிட்டு ஈஸ்வரரைமாத்திரம் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து ஆனந்தக்கூத்தாடினன். அப்பொழுது ஸ்ரீபார்வதி அம்மனுக்கு மஹாகோபமுண்டாகி பிர்மா-விஷ்ணு-ருத்திரன்-தேவேந்திரன்முதலாகிய முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளும் கின்னரர் கிம்புருடர் கெருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் ஜெனகர் ஜெனகனந்தனர் ஜெனக்குமாரர்கள் தும்புருநாரதர் கெவுதமர் அகஸ்தியர் மற்றுமுண்டான தேவர்களும்வந்து ஈஸ்பரரையும் நம்மையுங் கண்டு வணங்கிப்போவார்கள். இந்தப் பிறிங்கிமஹாரிஷிவந்து நம்மைப்புறம்பாகத்தள்ளிவைத்து ஈஸ்வரரைமாத்திரம் நமஸ்கரித்து நின்றுவென்றுவெகுகோபமுண்டாகி பரமேஸ்வரிகேட்க பரமேஸ்வரர்சொல்லுகிறார் வாராய்பார்வதியே அவன்பாக்கியத்தைக் கோறினவனல்ல மோட்சத்தைக் கோறினவனானபடியினால் எம்மைமாத்திரம் பிரதட்சண நமஸ்காரஞ்செய்தானென்று பரமேஸ்வரர்சொல்ல அப்பொழுது பரமேஸ்வரி கோபித்துக்கொண்டு பிறிங்கிரிஷியைப் பார்த்து ஓய் பிறிங்கிரிஷியே உன்னிடதேகத்திலிருக்கிற இரத்தமாங்கிஷம் நம்மிடகூறுச்சுதே அதை நீவைத்திருக்கத்தேவையில்லை கொடுத்துவிடும்பிள்ளாயென்று பரமேஸ்வரிசொல்ல அப்பொழுதுபிறிங்கிரிஷி தன்னிடசரீரத்திலிருந்த இரத்தமாங்கிஷத்தை உதறிவிட்டபின்பு தனனுடையகூறுகிய இரத்தமாங்கிஷத்தை எடுத்துக்கொண்டு

பரமேஸ்வரி பூலோகத்தில் வந்துவிட்டாள் வந்தபிறகு பிறிங்கிமஹாரிஷிக்கு இரத்தமாங்கிஷம்போய்விட்டபடி யினாலே எழுந்திருக்கமாட்டாமல் அசக்தனாய்நிற்கிறதை பரமேஸ்வரர்கண்டு ஏன்பிள்ளாய் பிறிங்கிமஹாரிஷியே அசக்தனானையென்றுகேட்க அதற்குமறுவுத்திரவுயாதெ னில் ஈஸ்பரியானவள் என்னைநீக்கி சுவாமியைமாத்திரம் தெண்டஞ்சமர்ப்பித்ததற்காக அம்மனுக்குக்கோபம்பிற ந்து தன்னுடைய இரத்தமாங்கிஷத்தை வாங்கிக்கொண் டாள். ஆகையால் அதினாலே அசக்தனானேன், இந்தா தெண்டென்று ஒருதெண்டுக்கோல் ரிஷிகையாலேகொடு த்தார் அந்தத்தெண்டை பிறிங்கிமகாரிஷி யென்பவர் கையிலேவாங்கி ஊன்றிக்கொண்டு மறு ஒருநமஸ்காரஞ் செய்து தம்முடைய ஆசிர்மத்துக்கு எழுந்தருளினா. பர மேஸ்வரி பரமேஸ்வரரைப்பார்த்து நீர்தானேஉபேஷை செய்பலாமோ இனிமேல்எனக்கு காரியமென்னவென்று கைலாயத்தைவிட்டு பூலோகத்தில் வால்மீகமகாரிஷிசஞ் சரிக்கான்ற பூங்காவனத்தில் ஒரு விருட்சத்தினடியில் எழுந்தருளியிருந்தாள். அந்ததிக்கில் பனிரண்டுவருஷம் மழையில்லாமல் விருக்ஷங்கள் செடிகள்உலர்ந்துவாடியு மிருந்த விருட்சங்களெல்லாம் துளிர்த்துதழைத்து புஷ் பித்து காய்த்து பழுத்து இன்னுமனேகபூஞ்செடிகளெ ல்லாம் மல்லிகை முல்லை சோங்கு இருவாக்ஷி மந்தாரை பாரிஜாதம் சண்பகம் சிறுமல்லிகை புன்னை பாதிரி வில் வம் பத்திரி துளபம் பின்னையுமுண்டான சகலஜாதிபுஷ்

பங்கள் விஸ்தாரமாய்ப்புஷ்பித்து பரிமளித்துசுத்தி நாலு யோசனைவிஸ்தீர்ணம் பரிமளம்வீசினது அந்தசமயத்தில் வால்மீகமகாரிஷி நம்மிட பூங்காவனத்தைப்பார்த்து அதிசயப்பட்டு பனிரெண்டுவருஷம் மழையில்லாமல் உலர்ந்துயிருக்கின்ற விருட்சங்களெல்லாம இப்பொழுது ஆச்சரியமாய் துளிர்த்து புஷ்பித்து காய்த்து பழுத்திருக்கின்ற ஆச்சரியம் என்னமோ தெரியவில்லையென்று மனதில்நினைத்துக்கொண்டு பூங்காவனத்திற்குவந்தார்.

வந்தவுடன் சகலபுவனகர்த்தாவாகியபரமேஸ்வரர் பரமேஸ்வரி பிர்மா விஷ்ணு வந்திருக்கிறார்களோ அவர்களைக் காணவேண்டுமென்று அந்தவனமெல்லாஞ்சுத்தி ஆராய்ந்துபார்க்குமிடத்தில் ஸ்ரீபார்வதாதேவி அம்மன் ஒருவில்வவிருட்சத்தினடியில் எழுந்தருளியிருக்கிறதை க்கண்டு மூவருக்குமுதன்மையானதாயே முப்பத்துமுக்கோடிதேவர்களுக்கும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுக்கும் ஒருதெய்வமாய் நின்ற பராசத்தியான ஈஸ்வரியே நான் யெத்தனைகோடி தவஞ்செய்தேனோ இந்தப்பூலோகத்திற்கு நீர் எழுந்தருளின தென்னவென்று மிகவும் தோத்திரஞ்செய்து நீர் என்னகாரணமாக எழுந்தருளினதோ அதை யடியேனுக்குத்திருவாய்மலரத் திருவுளம் பற்றவேண்டுமென்று வாலமீகமகாரிஷிகேட்க அப்பொழுது பார்வதியம்மன் திருவாய்மலர்ந்து சொல்லுகிறாள். கேளும் ஒ வால்மீகமஹாரிஷியே ஸ்ரீகயிலாயத்தில் பா

மேஸ்பரரும் நாமும் ஓர்நவரத்தின சிம்மாதனத்தில் வீற்றிருக்கையில் பிர்மா விஷ்ணு தேவேந்திரன்முதலான தேவர்களும் மற்றமுண்டான மஹாரிஷிகளும் வந்து இருவரையுஞ் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துப் போவார்கள் ஒருநாள் பிறிங்கிரிஷிவந்து சுவாமியைமாத்திரம் நமஸ்கரித்து நம்மைப் புறம்பாகத்தள்ளின . னப்பொழுது நம்மை இவனேபுறம்பாகத் தள்ளுகிறவனென்று மகா கோபத்துடன் நம்முடைய கூறுன இரத்தமாங்கிஷத்தை வாங்கிக்கொண்டேன் அப்பொழுது பரமேஸ்வரர் அவனுக்கு உபேக்ஷைசெய்து ஒருதெண்டுகொடுத்தார். இப்படிசெய்யலாமோவென்றுகேட்டதற்குஅவர்மறுமொழி சொல்லவில்லை.

ஆகையால் நமக்குக்கோபம்பிறந்து பூலோகத்திற்கு வருகிறபொழுது இந்த பூங்காவனத்தைக்கண்டு இங்கேயிருந்தோமென்று பார்வதியம்மன் வால்மீசமகாரிஷியுடன்சொல்ல அந்தமகாரிஷியும்என்னுடையஆசிர்மத்திற்கு எழுந்தருளிவரவேண்டுமென்று நமஸ்கரிததார் அப்படியேநல்லதென்று பரமேஸ்வரியும் வால்மீக மகாரிஷியினுடைய ஆச்ரமத்திற்குதபவாய்வர ரிஷியானவர் அம்மனிருக் ஒருஆசிரமமும்ஒருநவரத்தினசிம்மாசனமும்உண்டுபண்ணி அந்தநவரத்தின சிம்மாசனத்தின்மீது எழுந்தருளினபின்பு பரமேஸ்வரி வால்மீசமகாரிஷியைப்பார்த்து ஓமஹாரிஷியே இந்தபூலோகத்தில் நான்ஒருவிரதம்அனு

ஷ்டிக்கவேண்டும் நூதனமாய் மேலானவிரதம் ஒன்றிருக்குமானால் அதை எனக்கு நீர் சொல்லவேண்டுமென்று கேட்க வால்மீகமஹாரிஷி தொழுது தோத்தரித்து என் தாயே லோகமாதாவே அபிராமித்தாயே திரிபுரசம்மாரீ சிவகாமிகௌரி கைலாசவாசகி விபூதிருத்திராக்ஷி கிருபாசமுத்திரி கிருபாநந்திவேதஸ்வரூபி உம்மிடபாதத்திற்குஅடிமையாகிய அடியேன்ஒருவிண்ணப்பஞ்சொல்லுகிறேன்கோபமில்லாமல்கேட்டுதிருவுளஞ்செய்யவேண்டுமென்றுசொல்ல ஆனால் அதென்னவென்று அம்மன்கேட்க கேளாய்ஈஸ்வரியே இந்தபூலோகத்திலொருவருக்குந் தெரியப்படாத ஒருவிரதமுண்டு அந்தவிரதத்திற்கு கேதாரீஸ்வர நோன்பென்றுபெயர் அதை இதுவரையில் யாரும்அநுஷ்டிக்கவில்லை நீர் அந்தவிரதத்தை அநுஷ்டித்தால் இஷ்டசித்தியாமென்று சொன்னார் அதைப் பரமேஸ்பரிகேட்டு அந்தவிரதம் எக்காலத்தில்எவ்விதமாக அநுஷ்டிக்கின்றதுஎனக்குநன்றாய்நீர்தெரியப்படச்சொல்லவேண்டுமென்றுகேட்க வால்மீகமகாரிஷி சொல்லுகிறார் புரட்டாசிமாதச்சுக்கிலபட்சத்தசமிதுடங்கிஐப்பிசி மாதம் கிருஷ்ணபட்சம் தீபாவளி அமாவாசை வரைக்கும் இருபத்தொருநாள் பிரதிதினம்ஸ்நானஞ்செய்துபரிசுத்தவஸ்திரந்தரித்துக்கொண்டுஆலாவிருட்சத்தின்அடியில் மணலினாலேசிவலிங்கம்பிடித்துவைத்து ஈஸ்வரராகப் பாவித்து அபிஷேகஞ்செய்து விபூதிசந்தனாட்சதைபுஷ்பஞ்சாத்தி தூபதீப நைவேத்தியஞ்செய்து ஒரு வெல்ல

வுண்டை ஒருசந்தனவுண்டை ஒருமஞ்சளுண்டை ஒரு அதிரசம் ஒருவாழைப்பழம் ஒருதேங்காய் ஒரு பாக்கு ஒருவெற்றிலை இதுகளெல்லாம் நேமகமாய்வைத்து நை வேத்தியஞ்செய்து தூபதீபங்கொடுத்து சுகந்த வில்வார்ச்சனை அர்ச்சித்து நமஸ்காரஞ்செய்து பிற்பாடு ஒருகயிறு இருபத்தோரிழையிலேமுறுக்கி அதைத் தினந்தினமும் ஒருமுடியாக இருபத்தொருமுடிந்து தினந்தினமும் உபவாசமாகயிருந்துநைவேத்தியஞ்செய்த அதிரசத்தையும் புசித்து இந்தப்படிக்கு இருபத்தொருநாளுங் கிரமமாக இந்தவிரதத்தை அனுஷ்டித்தால் இருபத்தோராநாள் தீபாவளி அமாவாசையன்றைக்குப் பரமேஸ்வரர் ரிஷபவாகனரூடராய் எழுந்தருளிவந்துகாக்ஷிகொடுத்து நீர்கேட்டவரத்தைக்கொடுப்பாரென்றுவால்மீகமகாரிஷி சொல்ல அதைக்கேட்டீஸ்வரி வெகுசந்தோஷப்பட்ட பிறகு வால்மீகரானவர் ஈஸ்வரிகையினால் சகலசாமான்களுந்தருவித்து ஐப்பிசிமாசத்திலே சுக்கிலபட்சந்தசமி துடங்கி அமரபட்சம் சதுர்த்தசி அமாசைவரைக்கும் இருபத்தொருநாளும் தினமானம் ஸ்நானஞ்செய்து பரிசுத்தவஸ்திரந் தரித்துக்கொள்ளச்சொல்லி ஆலாவிருட்சத்தின்கீழே மணலாலே சிவலிங்கம் பிடித்துவைத்து ஈஸ்பரராகப்பாவித்து அபிஷேகஞ்செய்து சந்தனக்ஷதை புட்பஞ்சாத்தி தூபதீபம்பரிமாறி நைவேத்தியம ஒரு வெல்லவுண்டை ஒருசந்தனவுண்டை ஒருமஞ்சள்உண்டை ஒருஅதிரசம் ஒருபழம் ஒருபாக்கு ஒருவெற்றிலை

இதுகளை நேமமாகவைத்து நைவேதனஞ்செய்து தூபதீபங்கொடுத்து சுகந்த வில்வார்ச்சனைசெய்து நமஸ்காரஞ்செய்வித்து ஒருயிலையிலே ஒரு நூலும்வைத்து அதிலே ஒருமுடிமுடிந்து சுவைத்து பிற்பாடு நேமகத்தோடே அந்தநைவேத்தியத்தை சாப்பிடச்சொல்லி இப்படிஈஸ்வரியாள் கையினாலே இருபத்தொருநாள் பூசைசெய்வித்து இருபத்தொருபழம் இருபத்தொரு அதிரசம் இருபத்தொரு வெல்லஉண்டை இருபத்தொரு சந்தனஉண்டை இருபத்தொரு மஞ்சளுண்டையும் நைவேத்தியஞ்செய்து தூபதீபங்கொடுத்து இருபத்தொருபிழையிலே தோரணித்து இருபத்தொருமுடிமுடித்து தரித்துக்கொண்டு அர்ச்சனைசெய்துஈஸ்பரிநமஸ்காரஞ்செய்துதோத்தரிக்கும்போது கைலாயத்திலேயிருந்து பரமேஸ்வரர் ரிஷபவாகனத்தின்பேரிலே பிர்மா-விஷ்ணு-தேவேந்திரன்முதலான தேவர்கள்ரிஷிகள் சூழத்தக்கதாகப் பார்வதாதேவிக்கு முன்பாகவந்து ஓய்பராசத்தி உமக்கென்ன வேணுமென்றுகேழ்க்க உம்மிடசரீரத்திலேஅர்த்தசரீரம் வேண்டுமென்றுகேழ்க்க அப்படியே அர்த்தநாரி ஈஸ்வரராய்காக்ஷிகொடுத்து இன்றுமுதல்யிந்தவிரதத்தையாதாமொருவர் அனுஷ்டித்தாலும் அவர்களுக்கு வேண்டிய பாக்கியத்தைகொடுப்போமென்றுசொல்லி கைலாயத்துக்கு யெழுந்தருளினர்.

அப்படிக்கொற்ற கேதாரிவிரதத்தை தேவதா ஸ்ரீகள்முதலானோரும் அனுஷ்டித்து வேண்டியவரங்களைப்

பெற்றூர்கள் இப்படி நடந்துவருகிறநாளையிலே பூலோக த்துஜெனங்களுக்குதெரிவிக்கும்பொருட்டு தெய்வலோ கத்திலுமிருந்து தெய்வகன்னியர்கள் பூலோகத்துக்குவ ந்து ஒருகெங்கைக்கரையிலே ஆலாவிருட்சத்தின் கீழே அந்த இருபத்தொருநாளும் அப்படியேநோற்கிறது வெ குஅருமையென்று ஒரேதரமாய்ஐப்பிசிமாசம்அமரபட் சத்து சதுர்த்தசியில் அந்ததெய்வகன்னியர்கள் மணலி ஞலே இலிங்காகாரமாய் உண்டாக்கிவைத்து இருபத்து ஒருதரம்பூசைசெய்து இருபத்தொருபழம்இருபத்தோர் அதிரசம்இருபத்தொருவெல்லவுண்டை இருபத்தொரு சந்தனவுண்டை இருபத்தொருமஞ்சளுண்டை இருபத் தொருபாக்கு இருபத்தொருவெற்றிலை இருபத்தொரு யிழையிலேகயிறு அதிலே இருபத்தொரு முடிமுடிந்து வைத்து நைவேத்திய தூபதீபங்கொடுத்து நல்லசுகந்த புஷ்பங்கள் வில்வங்களாலே அர்ச்சனைசெய்து வருகிற வேளையிலே ஒரு ராஜாவுக்கு இரண்டுபெண்களுண்டு ஒருத்திபேர்புண்ணியவதி ஒருத்திபேர் பாக்கியவதியெ ன்றும்பெயரை உடைத்தானவர்கள் அந்தப்பெண்கள் தகப்பனர் மிகவுந்தரித்திரர் இப்படியிருக்கிறவர்கள் அந் தபெண்களுக்கு கலியாணமும்இல்லை அந்தஇரண்டுபெண் களும் அன்றைக்கு கெங்கைக்கரைக்குவந்தார்கள்.

அங்கேதெய்வகன்னியர்கள் நோன்புநோற்கிறதை ப்பார்த்து அம்மாநீங்கள்யார் இவ்விடத்திலென்னசெய்

• குறீர்களென்றுகேழ்க்க அப்படிக்கேட்டபெண்களை தெய்வகன்னியர்கள்பார்த்து அவர்கள் விருத்தாந்தத்தைக் கேட்டு ஒய்பெண்களே நாங்கள்தெய்வகன்னியர்கள் பூர்வத்திலே இந்தநோன்பை பரமேசுவரிநோத்து ஈஸ்வரர் இடப்பாகம்பெற்ருள் இதுகேதாரிவிரதம்இந்தநோன்பு நோற்கிறவர்களுக்கு நினைத்தகாரியம் கைகூடுமென்று சொன்னார்கள். அப்போ அந்தபெண்கள் இந்தநோன்பு நோற்கிறகாலமும் பிதினடத்தையுஞ் சொல்லவேண்டுமென்றுகேழ்க்க இதுதுலாமாசமாகிய ஐப்பிசிமாதம்சுக்கிலபட்சம் தசமிதுடங்கிய அமரபட்சம் சதுர்த்தசி அமாவாசைபரியந்தம் இருபத்தொருநாள்தினம் ஸ்தானஞ்செய்து பரிசுத்தமானவஸ்திரந்தரித்துக்கொண்டு ஈஸ்வரரை ஆலாவிருக்ஷத்தின்கீழே மணலினாலே இலிங்கமாகஅமைத்து பூசைநைவேத்தியஞ்செய்து வருகிறதென்று கிரமமாய்ச்சொல்லி இது நோற்கிறபேருக்கு சகல பாக்கியமும் பெறுவார்கள். அப்படி இருபத்தொருநாள் செய்கிறத்திற்கு நம்மாலேமுடியாது ஆகையால் சதுர்த்தசியிலேஸ்நானஞ்செய்து ஆலாவிருட்சத்தின்கீழேமணலினாலேகேதாரியீசுவரரைபாவனைசெய்துவைத்து பூசைசெய்து தூபதீபங்கொடுத்து இருபத்தொருபழம் இருபத்தொருஅதிரசம் இருபத்தொரு வெல்லவுண்டை இருபத்தொருசந்தனவுண்டை இருபத்தொர்மஞ்சளுண்டை இருபத்தொருபாக்கு இருபத்தொரு வெத்திலை இருபத்தொருபிறையிலேகயறு அதிலேயிருபத்தொருமுடிமுடி

ந்துவைத்து நைவேத்தியஞ்செய்து தூபதீபங்கொடுத்து அர்ச்சனைசெய்து நமஸ்காரஞ்செய்து துதிபண்ணினால் அவர்களுக்கு வேணத்தக்க பாக்கியத்தைக்கொடுப்பார் ஈஸ்வரரென்றுசொல்ல அந்த யிரண்டு இராஜகன்னியர்களும் தெய்வகன்னியரை வேண்டிக்கொண்டு தங்கள்பிருப்பெல்லாஞ்சொல்லி யெங்களைதேசாதிபதிகள்வந்துகலியாணஞ் செய்யத்தக்கதாகவும் அனுக்கிரகஞ் செய்யவேணுமேயென்று பெண்கள்தெய்வகன்னிகைகளை நமஸ்காரஞ்செய்ய அவர்கள்சந்தோஷமாய் இந்தநோன்பைநோர்க்குங்கோளென்றுபலவகையஞ்சொல்லி அவர்களுக்கு நூலில்லாமல்ஆலம்விழுதைவாங்கி அதிலேயிருபத்தொருமுடிமுடிந்து தாங்கள்படைக்கிறத்துடனே கூடவைத்துப்படைத்து அந்த நோன்புதோரணத்தை இவர்கள் கையிலேகொடுத்து இந்தப்படிவருஷாவருஷம் நோன்புநோற்றுவாருங்கள்உங்களுக்குவேண்டியபாக்கியம்வரும் கலியாணமுங் கைகூடுமென்றுவாழ்த்தி ஆசீர்வாதஞ்செய்ய அனுப்பி தெய்வகன்னியர்களும் தெய்வலோகமேபோனார்கள் பிற்பாடு இந்தப்பெண்கள் இரண்டுபேரும் தங்கள்தங்கள் வீட்டுக்குவரும்போது தங்கள்வீடு மாடமாளிகையும் சகலஅயிஸ்வரியமுமா யிருக்கக்கண்டு தங்கள்வீடு முன்னேயிருந்தாப்போல் இருக்கவில்லையேயென்றுமயங்கும்போது அவர்கள்தகப்பனார்முகசாலையிலே வந்து பெண்களை அழைத்துப்போய் அவர்களுக்கு திவ்வியவஸ்திரமும் திவ்வியாபரணமுங்கொடுத்து திவ்விய

போஜனமுங்கொடுத்துக்கொண்டுசந்தோஷமாயிருக்கும் போது இருசகிரியிலே யிருந்து ஒருராஜாவந்து பெண் கேட்டு புண்ணியவதியை சகலஆடம்பரத்துடனே கலியாணஞ்செய்துக்கொண்டுபோனபிற்பாடு அழகாபுரிபட்டணத்து இராசகுமாரன்வந்து பாக்கியவதியை சகல ஆடம்பரத்துடனேகலியாணஞ்செய்து அழைத்துக்கொண்டுபோனார்கள்

அவர்களும்இந்தநோன்புபலத்தினாலே நமக்குஅதிஷ்டம்வந்ததென்றுவருஷாவருஷம்நோன்புஅனுசரித்து புத்திரசம்பத்து போகபாக்கியமுமாயிருக்கிறநாளையிலே பாக்கியவதியென்றவள் தன்னுடைய அதிஷ்டத்தினாலே நோன்பைமறந்து நோன்புதோரணத்தை அவரைப்பந்தலின்பேரில அவிழ்த்துப் போட்டுவிட்டாள். அப்படி மறந்துபோனபடியினாலே மறுமண்டலத்துஇராஜா சதுரங்கசேனையுடனேவந்து அழகாபுரிபட்டணத்தைக்கொள்ளையிட்டு பண்டிபண்டாரசமஸ்தமும் வாங்கிக்கொண்டான் பாக்கியவதிக்கு தரித்திரம்வந்து பிரவேசித்து சாப்பாடு சாப்பிடுகிறதற்கும் பிரயாசைப்பட்டு வாசலிலே அவரைச்செடியிலேமிகுதியாய்க்காய்க்கிறபடியால்அந்த அவரைக்காயைப்பரித்து கிருட்சிசெய்துக்கொண்டிருப்பார்கள், பாக்கியவதி யெண்ணுதெல்லாம் யெண்ணி இருஜகிரியிலே தமக்கை வாழுகிறாளென்று பிள்ளையை யழைத்து இருஜகிரியிலே உன்னிட பெரிய தாயாரண்

டைக்குப்போய் நம்மிட வர்த்தமானஞ்சொல்லி சிலதிர வியம் வாங்கிவாவென்று வழிக்குகட்டமுதுகட்டிக்கொடுத்து அனுப்பினாள். அப்படியே அந்தப்பிள்ளை இருஜகிரிக்குப்போய் தன் பெரியதாயாரைக்கண்டு தங்கள் வர்த்தமானமெல்லாஞ்சொல்ல அவள் தாபந்திரியப்பட்டு பிள்ளையை நாலுநாள்வைத்திருந்து சில வஸ்திரங்களும் ஆபரணமும் சிலதிரவியமும் முடிப்புங்கட்டிக்கொடுத்து கட்டமுதுங்கட்டி அனுப்பினாள்.

அதைவாங்கிக்கொண்டு சிலதூரம்வந்து ஒருகுளக் கரையிலே மூட்டைவைத்துக் கட்டமுதுசாப்பிடுகிற வேளையிலே மூட்டையை கெருடன்யெடுத்துக்கொண்டு போய்விட்டது அதுகண்டு மனஸ்தாபப்பட்டு மறுபடியும் பெரியதாயாரிடத்துக்குப்போய் இந்த சேதியைச் சொன்னான். அப்படியாவென்று மறுபடியும் சில திரவியங்கட்டிக்கொடுத்து அனுப்பினாள்.

அதை யெடுத்துக்கொண்டுவரும்போது வழியிலே ஒருதிருடன்போலேவந்து அடித்துப் பரித்துக்கொண்டு போனான். அப்போது துக்கப்பட்டு பெரிய தாயாரண்டைக்குப்போய் நாங்கள்பண்ணின பாவமென்னமோ தெரியாது இப்போகொடுத்த திரவியத்தையும் திருடன் கொண்டுபோனானென்றுசொல்லக்கேட்டு உங்கள்தாயார் கேதாரீசுவரர் நோன்புநோத்து வருகிறாளாயில்லையா

வென்றுகேழ்க்க அந்தநோன்பு இப்போது நோற்கிறதி ல்லை முன்னே நோற்றக் கயற்றையும் அவரைப் பந்தலி ன்பேரில் போட்டுவிட்டாள். அன்றுமுதல் இப்படிவந் தாப்போலே காணுதென்றான் அப்படியாவென்று ஐப் பிசிமாதம்வருந்தனிலும் பிள்ளையைவைத்திருந்து தான் நோற்கிற நோன்புடனே பாக்கியவதிக்கும் ஒருநோன்பு வைத்துநோற்று அந்தநோன்புக்கயறும் பலகாரமும் பா க்குவெற்றிலை மஞ்சளும் இன்னுஞ் சில ஆடையாபரண மும் திரவியமுங்கொடுத்து சிலசேவகரையுங்கூட்டி இந் தநோன்பைவிடாமல் நோர்க்கச்சொல்லி சில புத்தியுஞ் சொல்லி அனுப்பினாள்.

அப்போது வழியிலேவரும்போது முன்னேபறித் துப்போன திருடனும் திரவியத்தையுங் கொண்டுவந்து கொடுத்தான் கெருடனும் மூட்டையைபோட்டு உன் தாய் விரதம் நோற்காமல் விட்டுவிட்டதினாலே இப்படி வந்தது இனிமேல் பயபக்தியுடனே நோன்பு நோற்கச் சொல்லென்று ஒருசத்தமுண்டாச்சுது அதுகண்டு இந் தப்பிள்ளை ஆச்சரியப்பட்டு சந்தோஷத்துடனே தன் வீட்டுக்குவந்து தன்தாயின்கையிலே நோன்பு தோரண மும் பலகாரமும் முன்னேகொடுத்து தனத்தையுங்கொ டுத்து நடந்த சவிஸ்தாரங்களையுஞ்சொல்ல மெய்தான் யென ஆங்காரத்தினாலே கெட்டேனென்று ஸ்நானஞ்செ ய்து கேதாரீசஸ்வரனை நமஸ்காரஞ்செய்து கயற்றை வா

ங்கிக்கட்டிக்கொண்டாள் அந்தநாழிகைக்கே தங்கள்பட்டணத்தைவாங்கிக்கொண்ட இராஜாவந்து தங்கள்பட்டத்தையும் தங்கள் பண்டிபண்டாரமும் ஆனைசேனையும் லொப்பிவித்து பகுதியுங்கொடுத்துப் போய்விட்டான்.

பிற்பாடு இவர்களுக்கு பழையபடிக்கு தங்கள் சீமையையாண்டுக்கொண்டுசகலசாம்பிராச்சியமும்அநுபவித்துக்கொண்டு நோன்பைமறவாமல் செய்துவந்தார்கள் ஆனபடியினலே இந்த கேதாரீசுவரர் நோன்பு யாதாமொருவர் தப்பாமல் செய்துவருகிறார்களோ அவர்களெல்லாம் புண்ணியவதி பாக்கியவதியைப்போல இம்மையிற் பாக்கியத்தை அநுபவித்து மறுமையில்மோட்சத்தையும் அடைவார்களென்று தர்மபுத்திரமஹாராஜனுக்கு நாரதமஹாமுனிவர்சொல்ல அப்படியே தர்மபுத்திரமஹாராசாவும் அனுபவித்து சத்துருஜெயஞ்செய்து நாடுராச்சியமும்பெற்று மோக்ஷமடைந்தார்கள்.

கேதாரீசுவரர் நோன்புகதை

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

திருப்போரூர்

சிதம்பரசுவாமிகள் இயற்றிய

மதுரை மீனாட்சியம்மை

கலி வெண்பா.

காப்பு.

அங்கயற்கு மாற்கு மரியபெருமானிடஞ்சேர்
அங்கயற்கண்ணம்மைக் கணியவே - அங்கயத்தின்
மாமுகங்கொள் கோமானை வாழ்த்திக்கலிவெண்பா
நாமுகந்து பாடுவோ நன்கு.

கலிவெண்பா.

சீராரும்பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராருமேனிக் கருங்குயிலே—ஆராயும் 1

வேதமுதலாகிநின்ற மெய்ப்பொருளேமின்னொளியே
ஆதிபராபரையே யம்பிகையே—சோதியே 2

அண்டரெல்லாம்போற்று மரும்பொருளேயாரணங்கே
எண்டிசைக்குந்தாயான வீஸ்வரியே—தெண்டிரையில் 3

வந்தவமுதேயென்று மாறுமலேரிணைப்பார்
சிந்தைதனிலேயுறையுஞ் செல்வியே—அந்தமிலா 4
மாயோன்றனக்கிளைய வல்லியேமாமயிலோன்
றாயேபராபரையே சங்கரியே—தூயவொளி 5
மன்னுங்கயிலாச மாமயிலேமேருவெனும்
பொன்னங்கிரியுடைய பூங்கொடியே—அன்னமே 6
அட்டகுலவெற்பா யமர்ந்தவளேயாதியந்த
மெட்டெட்டுந் தானா யிருந்தவளே—முட்டவெங்கும் 7
அவ்வெழுத்தாய்நின்ற வரும்பொருளேயாரணங்கே
உவ்வெழுத்தாய்நின்றதொரு வுண்மையே-யெவ்வெழுத்துந் 8
தானாகிநின்றதொரு தற்பரமேயெவ்வுயிர்க்கும்
ஊனாகிநின்றதே ருத்தமியே—கோனாப் 9
படியளக்கலோகம் பதினாலுமொக்க
அடியவரையீடேற்று மன்னா—முடிவிலா 10
ஓங்காரத்துட்பொருளே யுற்றநவகோணத்தில்
ரீங்காரந்தன்னி லிருப்பவளே—பாங்கான 11
முக்கோணத்துள்ளிருக்கு மூர்த்தியேமூவிரண்டாஞ்
சட்கோணத்துள்ளிருக்குஞ் சத்தியே—மிக்கபுகழ் 12
எண்ணிரண்டாங்கோட்டி லிருப்பவளேயெவ்வுயிர்க்கும்
பண்ணிசைந்தபாட்டின் பழம்பொருளே—விண்ணுலகின் 13
மேற்பட்டங்கூடுவி மேலாகிநின்றதொரு
நாற்பத்துமுக்கோண நாயகியே—சீர்பெற்ற 14
பஞ்சகோணத்திருந்த பைங்கிளியேபார்முழுதுந்
தஞ்சமதுவாகின்ற ததையலே—செஞ்சொன்மறைச் 15
சொல்லேபொருளே சுவையேயறுசுவையே
யெல்லாம்புவிக்கு மிறைவியே—தொல்லில 16

எறும்புகடையான தலை யெண்ணிலுயிர்க்கு
முறும்பொருளாயங்கங் குணர்வாய்ப்—பெரும்பயனாய் 17

ஆறாறுதத்துவமா யையிரண்டுவாயுவாய்க்
கூறாய்த்திசைபத்தின் கூட்டமதாய்ப்—பேறான 18

அஞ்செழுத்தாயெட்டெழுத்தா யைம்பத்தோரக்ஷரமாய்
பஞ்சவர்ணமாய்ப் பஞ்சதேவதையாய்—வஞ்சமற்ற 19

ஆறாதாரப்பொருளா யையைந்தாயைம்மூன்றாய்
வீறானசக்கரத்தின் மின்னொளியாய்க்—கூறுங் 20

கருவிகரணாதிகளாய்க் கைகலந்துநின்ற
பெரியதொருமாயைப் பிரிவாய்—உரியதொரு 21

தோத்திரத்திற்றோற்றமதாய்த் தொக்கிற்பரிசமதாய்
நேத்திரத்திற்பேரொளியாய் நின்மலமாய்—எத்தரிய 22

சத்தபரிசமதாய் ரூபரசகந்தமதாய்
மத்தப்பிரமத்த வைரவியாய்ச்—சுத்த 23

துரியமதாய்ப்பின்னுந் துரியாதீதத்தின்
அரியசிலம்பொலியு மார்ப்பத்—தெரிவரிதாய் 24

நாடுதனிற்சென்றிறந்து நற்பவுரிகொண்டுதொந்தம்
ஆடுகின்றபார்ப்பதியே யம்பிகையே—நாடிக் 25

களங்கமறவே தான் கரும்புருவந்தன்னிற்
பளிங்கொளியாய்நின்ற பரமே—வளம்பெறவே 26

கண்ணிரண்டினுள்ளே கருணைத்திருவடிவாய்ப்
புண்ணியமாய்நின்றருளும் பூவையே—பண்ணமைந்த 27

நாசிநுனிமே னடுவெழுந்த தீபமதாய்
ஓசைவிந்துநாதாந்தத் துட்பொருளாய்—நேசமுடன் 28

அஞ்சுமுகமா யகண்டபரிபூரணமாய்ப்
பஞ்சபூதம்மான பைங்கிளியே—கஞ்சமலர் 29

பாதமிரண்டாகி பச்சைநிறந்தானாகி
ஆதிமுதலாகிநின்ற வம்பரமே—தீதிலா 30
நெற்றிதனிக்கண்ணாகி நிட்களரூபப்பொருளாய்
உற்றவெளியாகிநின்ற வுத்தமியே—பத்திநிறை 31
ஆகாயத்தின்னொளியா யந்தரத்தின்ரூபமதாய்
மேகாதிக்குள்ளே விளைபொருளாய்—வாகாம் 32
இடைபிங்கலையாய் யிரண்டுக்குமெட்டாக்
கடையுஞ்சுழுமுனையாய்க் காவாய்—மடலவிழ்ந்த 33
மூலாதாரத்தொளியாய் மும்மண்டலங்கடந்து
மேலாதாரத்திருந்த வெண்மதியாய்ப்—பாலூறல் 34
உண்ணுஞ்சிவயோக வுத்தமியேமெய்த்தவமே
பண்ணுமறைவேதப் பழம்பொருளே—எண்ணரிய 35
மெய்ஞ்ஞானவித்த விளக்கொளியேமெய்ச்சுடரே
அஞ்ஞானமேயகற்று மம்மையே—பைந்நாகம் 36
பூண்டசிவனாரிடத்துப் பூங்கொடியேபாங்குடனே
தாண்டவம்மாடப்பவுரி தாளமொத்த—ஆண்டியுடன் 37
ஆடுங்கூத்தாடிச்சி யம்பிணைபக்தாடிசசி
தேடியுமால்காணச் சிவசத்தி—நாடியுனைப் 38
போற்றுமடியார்கள்வினை போக்கியேயஞ்சலென்று
தோற்றுகின்றவம்மை துடியிடைச்சி—ஏத்தரிய 39
பச்சைநிறத்தாள் பவளக்கொடியிடைச்சி
கச்சைப்பொருமுலைச்சி கலைச்சி—கொச்சை 40
மலையரையன்பெற்ற மலைச்சிகலைச்சி
நிலையறிவேதாந்த விமலி—அலையாத 41
அன்னநடைச்சி யருமறைச்சிபாண்டிச்சி
கன்னன்மொழிச்சி கருணைச்சி—பன்னுதமிழ் 42

வாய்ச்சிசடைச்சி வடிவுடையமங்கச்சி
பேய்ச்சியிளமுலைச்சி பேதைச்சி—காய்ச்சியபால் 43
வெண்ணெய்மொழிச்சி வெளிச்சிவெளியிடைச்சி
அண்ணுபுரந்தீயிட்ட வம்படைச்சி—நண்ணிதரும் 44
கொப்புக்குழைச்சி குவளைபொருவிழிச்சி
அப்புச்சடைச்சி சிவாகமத்தி—மெய்ப்பாங் 45
கருப்புச்சிலைச்சி கலைச்சிவலைச்சி
மருப்புத்தனத்தி மவுனத்தி—பொருப்பிடத்தி 46
தாமப்புயத்தி சமர்த்திதருமத்தி
நாமச்சிவபுரத்தி நாரணத்தி—தேமருவுங் 47
காரணத்திப்பூத கணத்திதனபார
வாரணத்தியட்டதிக்கு யாரணத்தி—பூரணத்தி 48
பாதபரிபுரத்தி பங்கயத்திசெக்கரத்தி
சோதிமணிநிறத்தி சொப்பனத்தி—பாதிமதி 49
சூடுகின்றசொக்கருடன் றுய்யபுலித்தோலுடுத்திக்
காடுதனில்வீற்றிருக்குங் காரணியே—நாடறியுஞ் 50
சேணிச்சிநல்ல சிறுத்தொண்டன்பிள்ளையறுத்
தூணிச்சிநஞ்சமுதா மூணிச்சி—பாணிச்சி 51
பாசாங்குசத்தி பாத்திபருப்பத்தி
காசாப்புமேனிக் கனதனத்தி—மாசிலா 52
அம்பரத்திமைம்புலத்தி யானதொருவேதாந்த
உம்பருக்குமெட்டாத வுத்தமச்சி—செம்பொன்வளைச் 53
செட்டிச்சிவையதனிற் சென்றுவெட்டிமண்சுமந்த
ஒட்டத்திபூதியணி யுத்தளத்தி—அட்டதிக்கும் 54
மின்னேவிளக்கே விலையில்லாவரத்னப்
பொன்னேநவமணியே பூங்கிளியே—இன்னமுதே 55

மாணிக்கவல்லியே மாமரகதப்பணியே
ஆணிக்கனகத் தரும்பொருளே—மாணுற்ற 56
சிங்காரவல்லியே செம்பொற்சிலைவளைத்த
சங்காளற்கன்பானக் கண்மணியே—மங்காத 57
தெய்வக்குலக்கொழுந்தே செம்பட்டுடைத்திருவே
ஐவருக்குந்தாயா யமர்ந்தவளே—மெய்யருக்குச் 58
சித்திகொடுக்குஞ் சிவானந்தியன்பருக்கு
முத்திகொடுக்குஞ்ஞான மூர்த்தியே—எத்திசையும் 59
தாயானவளேயித் தாவரசங்கம்விளங்குந்
தூயசுடர்மூன்றான சூக்குமமே—வேயீன்ற 60
நித்திலமேகற்பகமே நின்மலமேநன்மணியே
சுத்தபரிபூரணியே சுந்தரியே—அத்தருடன் 61
வாதாடுமங்கையே மாமந்த்ரரூபியே
வேதாந்தியேகமல மெல்லியே—நாதாந்த 62
மாயேசுவரியே மங்கையேமாமறைக்குந்
தாயாகிநின்ற சரஸ்வதியே—காயாப் 63
பழுத்தபழமாய்ப் பழத்திரதமாய்
முழுத்தபரானந்த முதலாய்—எழுத்துமுதல் 64
ஆறுசமயங்களுக்கு மவ்வவர்க்கும்வெவ்வேறாய்
வேறுபலரூபமாய் விகற்பமதாய்—கூறரிதாய் 65
அங்கங்குந்தானா யமர்ந்தவளேயாதியந்தம்
எங்கெங்குந்தானா யிருந்தவளே—திங்கணுதல் 66
அஞ்சுகமேதேனே யணங்கேயமுதமொழிக்
கிஞ்சுகமேபிஞ்சுமதிக் கிள்ளையே—கொஞ்சுகுயில் 67
கன்னிதிருசூலி கபாலிசிவகாமி
மன்னுகௌரி மகமாயி—பொன்னின்மலர்த் 68

தாளிசதுரி சவுந்தரிமுக்கண் ணுடைய
காளிபகவதி கங்காளி—தாளியாத் 69

தக்கன் தலையறுத்த தத்துவத்திதற்பரத்தி
அக்கினியையீர்ந்த வமர்க்களத்தி—மிக்கபுகழ் 70

வீரசத்திமேருவினை வில்லாவளைத்தவொரு
பாரசத்திவேதப் பராசத்தி—தாரணியுங் 71

கொண்டகாரிச்சிக்குங் குந்தளத்திமாமதனன்
சண்டைக்காரிச்சி சகதத்தி—துண்டமதிச் 72

செஞ்சடைச்சிகஞ்சுளிச்சி செம்படைத்திகங்கணத்தி
பஞ்சசத்திகொந்தளத்தி பைம்பணத்தி—அஞ்சனத்தி 73

முத்துவடக்கொங்கைச்சி முல்லைமுகிழ்நகைச்சி
பத்தரிடநெஞ்சகத்தி பாரிடத்தி—சுத்தவெள்ளை 74

அக்குவடத்தி யறம்வளர்த்தியன்புடைச்சி
செக்கரிளம்பிறைச்சி செண்பகத்தி—தக்கமணி 75

ஓலைக்குழச்சி யுபதேசகுண்டலச்சி
மாலைக்கழுத்தி மௌனத்தி—ஞானமெல்லாம் 76

அக்கரத்திபொக்கணத்தி யண்டபகிரண்டத்தி
முக்கணத்திநிட்களத்தி மோட்சத்தி—மிக்கபுகழ் 77

ஏகாக்ஷரத்தி யிமயப்பருப்பதத்தி
நாகாதிபூண்டசிங்க நாதத்தி—வாகான 78

பத்மாசனத்தி பரிமளத்திபாம்பணைத்தி
கற்பாந்தரத்தி கருநிறத்தி—விற்காம 79

வேடிச்சிநல்லதொரு மீனவனுக்கன்றுமுடி
சூடிச்சிகொக்கிறகு சூடிச்சி—நாடிச்சி 80

பாதந்தனைத்தேடும் பங்கயத்தில்வீற்றிருக்கும்
வேதன்கலையறுத்த வித்தகத்தி—நீதிபுனை 81

பாடகத்திகிதப்ர பந்தத்திவெள்ளிமன்று
ளாடகத்திகூட லூக்கு ளாதியே—ஏடெதிரே 82
ஏற்றுழன்சமண ரெண்ணாயிரங்கழுவில்
வீற்றிருக்கவைத்தமறை வித்தகியே—நாற்றிசையும் 83
கொண்டாடப்பெற்றதொரு கோமளமேயாமளையே
தண்டாமரைத்திருவே தையலே—மண்டலங்கள் 84
எங்குமொத்துநின்றருளு மீசுவரியேமாமதுரை
அங்கயற்கண்ணியே யம்மையே—துங்க 85
ஒளியேபெருந்திருவே யோதிமமேயுண்மை
வெளியேபரப்பிரம வித்தே—அளிசேரும் 86
கொந்தளகபந்திக் குயிலேசிவயோகத்
தைந்தருவேமூவருக்கு மன்னையே—எந்தனிட 87
அல்லல்வினையெல்லா மகற்றியேயஞ்சலென்று
நல்லசவுபாக்கியத்தை நல்கியே—வல்லபத்தால் 88
ஆசுமதுரஞ்சித்ர வித்தாரமென்னநிஞர்
பேசுகின்றவுண்மைப் பெருவாக்கும்—நேசமுடன் 89
நந்தென்னையாட்கொண்டு சற்குருவாயென்னகத்தில்
வந்திருந்துபுத்தி மதிகொடுத்துச்—சந்ததமு 90
நீயேதுணையாகி நின்றிரட்சியங்கயற்கட்
டாயே சரணஞ் சரண். 91

மதுரை மீனாட்சியம்மை கலிவெண்பா

முற்றிற்று.